காஞ்சி

நாடு



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை - 600 008.

முத்தமிழறிஞர்
தலைவர் கலைஞர் வாழ்க!

-: இனமானக்கவிஞர் இடிமுரசார் :-

அகவை எழுபதாம் ஆண்டிலடி வைக்கும்
தகவார் கலைஞரவர் தங்கள்—அகமலர்ந்தே
பொன்றாப் புகழ்பெருக்கி பூந்தமிழர் நாடாண்டே,
என்னென்றும் வாழ்க இனிது!

உள்ளம்போல் ஓங்குகுவம் ஒவ்வும் படர்நெற்றி
தெள்ளறிவின் நேர்காட்டும், சீர்நயனம்—கள்ளமிலா
வெள்ளை மனக்கனிவை வீசும் நற்கலைஞர்
வள்ளுவர்போல் வாழ்க வரைந்து!

உண்மை விளம்பும் உயர்வுக் கவியரசாய்ப்
பண்பாட்டில் நல்ல பரவுபுகழ்—கொண்டிலங்கும்
அண்ணன் பொற்கலைஞர் ஆற்றல்சால் பேரறிஞர்
தண்டமிழ்போல் வாழ்க செழித்து!

JL
M2112, N92KN.
N93.1.11
217210.

2372
ACTNAL
03372

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் -தொகுப்பு!

வெளியீட்டு திட்டம்

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் 1945-ல் தொடங்கி இதுவரை பல பதிப்பகத்தாரால் சிறுசிறு நூல்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன சிறுசிறு நூல்களை பாதுகாப்பது கடினம். அவைகளையெல்லாம் பகுத்து, தொகுத்து வெளியிடும் முயற்சியில் இறங்கியிருக்கிறோம் சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள், தம்பிக்கு கடிதங்கள், சொற்பொழிவுகள், கட்டுரைகள், சட்டமன்ற பாராளுமன்ற உரைகள் என 15 தொகுப்புகளாக வெளிவர இருக்கிறது. இந்தத் தொகுப்புகள், முழுமையாக பேரறிஞர் அண்ணாவை அடுத்த தலைமுறை அறிந்து கொள்ளுகிற வகையில் அமைந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் நல்ல தரமான,காலத்திற்கும் நிலைத்து நிற்கக்கூடிய அளவில் செய்ய நிறைய முதலீடு தேவை, ஆதலால் அறிஞர் அண்ணாவின் ஆர்வலர்கள் இதற்கு முன் பணம் கொடுத்து உதவ முன்வரவேண்டும் என்பது எங்கள் பணிவான வேண்டுகோள்.

ஒரு தொகுப்பின் விலை, 150/- ஒவ்வொரு திங்களுக்கு ஒரு தொகுப்பு வெளியிடுவது எங்கள் குறிக்கோள். வேண்டுவோர் இசைவு தெரிவித்து முதலில் எழுதுங்கள். இப்போது பணம் அனுப்ப வேண்டாம். குறைந்தது 1000 பேர் இசைவு தெரிவித்து கடிதம் எழுதியவுடன், பணம் அனுப்பச் சொல்லி அறிவிப்பு வரும். அப்போது பணம் அனுப்பவேண்டும். முதல் தொகுப்பு வருகிற செப்டம்பர் 15ல் வெளிவர இருக்கிறது.

அறிஞர் அண்ணாவின் எழுத்துக் கருவூலங்கள் வெளிவர எங்களுக்கு உதவுங்கள். இதுவரையில் எவரும் இந்தப் பணியைச் செய்யவில்லை.

நாங்கள் இறங்கியிருக்கிறோம் உங்களை நம்பி...!

தலைவர்

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை

7, அவின்யு சாலை, சென்னை-34.

காஞ்சி நாடு

மலர்—1 7-6—1993 இதழ்—11

திருவள்ளுவர் ஆண்டு 2024 மேழம் (வைகாசி)

புதியதோர் உலகம் செய்வோம்
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை அமைப்பாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

பேரன்புடையீர்,

நமது பேரவையின் வளர்ச்சிக்கு அச்சாணியாக இருப்பது நமது 'காஞ்சி நாடு' திங்கள் இதழ் ஆதலால் 'காஞ்சி நாடு' வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது நமது கடமை. வருகிற செப்டம்பர் 9ுக்குள் அண்ணா பிறந்த நாள் கொண்டாடும்போது மாவட்டங்கள் கணிசமான அளவுக்கு இதழுக்கு ஆண்டு சந்தாக்கள் சேர்க்க வேண்டும். இப்போதே இந்த பணியை தொடங்குங்கள். குறைந்தது மாவட்டத்திற்கு இருநூற்றைம்பது ஆண்டு சந்தாக்களை சேர்க்க வேண்டும். செப்டம்பர் 15க்குள். 'காஞ்சி நாட்டுக்கு' ஒருவர் ஆண்டு உறுப்பினர் ஆனால் அவர் பேரவையிலும் உறுப்பினர் ஆகிறார். அதற்காக தனி கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. தென்னாற்காடு மாவட்டம், நெய்வேலி கிளை இந்தப் பணியில் முந்திக் கொண்டிருக்கிறது. மற்ற மாவட்ட பொறுப்பாளர்களும் இதை தலையாயப் பணியாகக்கொண்டு இன்றே செயல்படத் தொடங்குவீர். பேரவைக்கும், 'காஞ்சி நாடு' இதழுக்கு ஆக்கமும் ஊக்கமும் தேடுவீர்

ஓர் ஆண்டு நன்கொடை	ரூ.	25/-
வாணாள் நன்கொடை	ரூ.	250/-
புரவலர் நன்கொடை	ரூ.	1000/-

விளம்பரக் கொடை

கடைசி அட்டை	ரூ.	1000/-
உள் அட்டை	ரூ.	750/-
உள் பக்கம்	ரூ.	500/-

217210

—பரி—

அண்ணே வணக்கம்
வாங்க தம்பி வணக்கம்
என்னண்ணே, தேர்தலை தள்ளி வச்சிட்டாங்களே!
தேர்தலை தள்ளி வச்சது இருக்கட்டும். தேர்தல் கூட்டு
ஒண்ணு முடிவாகி, மொட்டிலேயே கருகி போச்சே.
எதைச் சொல்றீங்க
பா.மா.க. அவசர அவசரமா காங்கிரசை ஆதரிக்கிறேன்னு
அறிக்கை விட்டு...
ஓ காங்கிரஸ் தலைவர்கள் இந்தக் கூட்டில் எங்களுக்கு
சம்மதமில்லேன்னு சொன்னதையா
ஆமாம் தம்பி, இவங்க வலிய போய் காங்கிரசை
ஆதரிச்சாங்க...... அதுக்கு இவங்க சொன்ன காரணம்
இருக்கே...காங்கிரஸ் ஆட்சியில் அவ்வளவு
ஊழல் இல்லே...திராவிட இயக்கங்கள் வந்த பிறகுதான்
ஊழல் அதிகமாயிடுச்சுன்னு...
ஆமாண்ணே நான்கூட பார்த்தேன். உங்களைக் கேட்டா
உங்க காலத்திலே நடந்த காங்கிரஸ் ஊழலே
பட்டியல் போட்டு சொல்வீங்களே.
காங்கிரஸ் முதல் அமைச்சரா இருந்த கெய்ரோன்
முந்திர ஊழல் T. T. கிருட்டினமாச்சாரி
மேல் சொல்லப்பட்ட ஊழல்—அவர் பதவி விலகியது
மறைந்த இந்திரா காந்தி காலத்து ஊழல், மறைந்த ராஜீவ் காலத்து
'போபர்ஸ்' ஊழல்—இதெல்லாம் இவங்களுக்கு
ஊழலா தெரியலே...
அது மட்டுமாண்ணே—தனி ஈழத்தை ஏத்துகிற பா.மா.க.
கூட்டுன்னுப்போது...எப்படி அண்ணே அங்கே
இருக்கிற இளைஞர்கள் அதை ஏத்துக்கு வாங்க...
அதைவிட கொடுமை இவங்களா வலிய சென்று
உங்களுக்கு உதவுறோம்—தேர்தலிலே அப்படிங்கராங்க.

அவங்க வேணாங்கறாங்க...
இதுக்கு நேர்மாறான நிலமை ஒரு காலத்திலே
என்னண்ணே அது?
1950லே, மாணிக்கவேல் நாய்க்கர்னு ஒரு தலைவர்
அவரு இன மக்களுக்காக கட்சி நடத்தி தேர்தலிலே
ஜெயித்தும், மந்திரி பதவிக்காக காங்கிரசிலேயே
சேர்ந்துட்டாரு
கேள்விபட்டிருக்கேன்
அது மட்டுமா, அதுக்கப்புறம், இராமசி படையாச்சி
என்பவரும், இதேபோல் இன மக்கள்
உதவியோடு எம்.எல்.ஏ. ஆகி மந்திரி பதவிக்காக
காங்கிரசிலே சேர்ந்து அந்த இனத்தோருடைய
நம்பிக்கையை பாழாக்கிட்டாரு.
அண்ணே அப்போ நான் நினைக்கிறேன்...
இப்போது உள்ள தலை முறைகிட்டே அந்த முறை செல்லுபடி
யாகதுன்னு தெரிஞ்சிகிட்ட காங்கிரஸ், இப்படி கூட்டுன்னு
சொல்ல வச்சி அது இல்லேன்னு ஆயிட்டா, அந்த இயக்கம்
தானா பலமிழந்து போகும்னு செஞ்சிரிப்பாங்களோ
தம்பி, காங்கிரசைப் பத்தி தான் நமக்கு தெரியுமே
புலிகள் நடமாட்டம்னு தி மு க. ஆட்சியை கலைச்சாங்க
கவர்னர் ஆட்சியிலே ராஜீவ் மரணம் ஏற்பட்டது
அதுக்கு ஏதாவது விசாரணை வச்சாங்களா
இல்லியே — அதுக்கு மாறா இதுதான் சமயம்னு தி.மு.க.
மேலே பழியைப் போட்டு அராஜகம் பண்ணாங்க
அதுதான் போகட்டும்—விசாரணை கமிஷன்லே
தி.மு.க மேலே தப்பில்லே, காங்கிரஸ் மேலே தான்
குத்தம்னாங்க—அது பெருந்தன்மையா தி.மு.க. மேலே
தவறா சொல்லிட்டோம் அப்படின்னு சொல்லி
மன்னிப்பு கேட்டாங்களா, பொது மக்கள்கிட்டே.
ஆமாண்ணே
அது மட்டுமில்லே அ. தி. மு. க. வோட கூட்டு இருக்கச்சே
விடுதலைப் புலிகளை அடக்கிட்டாங்க அப்படின்னு
முதல்வரை பாராட்டினாங்க—கூட்டு இல்லைன்னு
தெரிஞ்ச அடுத்த கணம்—அ.தி.மு.க. ஆட்சியில்
விடுதலைப்புலிகள் நடமாட்டம்னு பேச ஆரம்பிச்சிட்டாங்க
இதெல்லாம் அண்ணா, மொத்தமா அதிகாரம்
மத்தியில் குவிந்திருக்கிறதாலே வருகிற ஆணவம்
தம்பி. மக்கள் ஒண்ணும் ஏமாளியில்லே
கவனிச்சுகிட்டுதான் இருக்கிறாங்க
தேர்தல் காலத்திலே பதில் சொல்வாங்க.

JC NO.3.1.1

(32-ம் பக்கத்தொடர்ச்சி)

உலகம் புகழ் பெற்ற எழுத்தாளரான சல்மான் ருஷ்டி என்பார் தமது 'கற்பனைத் தாயகங்கள்' என்ற கட்டுரைத் தொகுப்பில் இந்திய நாடு பற்றிக் கூறியிருக்கும் சில கருத்துக்கள் நம் சிந்தனைக்குரியவை யாகும். அவர் கூறுகிறார்:

> ''நான் ஒரு புதிருக்கு விடைகாண விரும்பினேன். 'இந்தியா என்ற ஒன்று இருக்கிறதா?' என்பதுதான் அது. மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் இது ஒரு விசித்திரமான கேள்வியாகத் தான் தோன்றும் என்ன இருந்தாலும் அந்த மாபெரும் நிலப்பரப்பு இருக்கவே செய்கிறது......உலகின் மாபெரும் மக்களாட்சி நாடாய் அது இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதனுடைய அரசியலமைப்புப் பற்றியும் இந்திய நாடு என்ற முறையிலும் சிந்திக்கும்போது தான் அந்தக் கேள்வியின் பொருள் புரிகிறது. இந்தியாவின் ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்குரிய வரலாற்றில் ஒன்றுபட்ட இந்தியா என்ற ஓர் அமைப்பு எப்போதும் இருந்தது கிடையாது. மொகலாயர் களோ, ஆங்கிலேயர்களோ இந்த மொத்தப் பரப்பளவையும் கட்டியாண்டது கிடையாது என்றாலும் ஒன்றுமே இல்லாத ஒரு பொருள் ஒரு நள்ளிரவில் விடுதலை பெற்றதாகத் தெரி விக்கப்பட்டது. ஆனால் அது (அவ்வாறு விடுதலை பெற்ற பொருள்) யாது? என்ன பொதுவான அடிப்படையில் அது அமைந்துள்ளது? சில நாடுகள் மொழியின் அடிப்படையில் உருவாக்கியுள்ளன. ஆனால் இந்தியாவிலோ பதினைந்துக் கும் அதிகமான பெரிய மொழிகளும் எண்ணிலடங்காத சிறிய மொழிகளும் உள்ளன. இந்த நாட்டு மக்கள் இன அடிப்படை யிலும் ஒத்தவர்களாக இருக்கவில்லை.''

இவ்வாறு கூறியுள்ள சல்மான் ருஷ்டி, இப்படியான கதம்பத்தின் கதம்பம் என்று கூறக்கூடிய ஒரு நாடு இத்தனை ஆண்டுகளாய் நிலைத்திருப்பது பற்றி வியப்புத் தெரிவித்திருப்பதுடன் இன்னும் எத்தனை ஆண்டுகள் இது நிலைத்திருக்கும் என்ற ஐயப்பாட்டினையும் எழுப்பியுள்ளார்.

இந்த அறிஞர் பெருமக்களெல்லாம் இப்போது கூறும் கருத்துக் களைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே தொலை நோக்குடனும் ஆழ்ந்த அறிவாற்றலுடனும் விளக்கிக் கூறினார் என்பதை எண்ணும்போது வியப்பாக இல்லையா? அந்த மாபெரும் மேதையின் வாதங்களுக்குச் செவிமடுக்காமல் டெல்லிப் பேரரசு பிரிவினைத் தடைச்சட்டம் கொண்டு வந்தது. அதன் பிறகு தான் பஞ்சாபிலும் காஷ்மீரிலும், அசாமிலும், நாகாலாந்திலும் பிரிவினை இயக்கங்கள் வலுப்பெற்றன.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை உணர்வுகளைச் சர்வாதிகாரிகளாலேயே சமாளிக்க முடியாமற் போனது அண்மைக் கால வரலாறு. ஆதிக்கவாதிகள் வரலாற்றிலிருந்து பாடங் கற்றுக் கொள்வார்களாக!

இந்தி!

★ பேரறிஞர் அண்ணா ★

இருந்ததை இழந்தோம் என்பது கேவலம். இழந்திடுவோம் என்ற நிலையை முன்கூட்டி அறிந்திடாதிருந்தது மடைமை அறிந்த பிறகு தடுத்திடும் முயற்சியில் ஈடுபடாதிருத்தல் கொடுமை.

இழந்தபின் காதணி, காலணி, காட்டிக் கண்ணீர் சிந்துவது, இவை யாவும் கூட்டிச் சேர்த்த சேறு அன்றோ!

மொழி இன்று தாக்கப்படுகிறது. சிறுகச் சிறுக அழிக்கப்பட்டு வருகிறது—அரச அவை அதனை ஏற்க மறக்கிறது—அஞ்சல் நிலையத்தார் அதனை அடித்து விரட்டுகிறார்கள்—நாணயம் அதனைத் தாங்கிட மறுக்கிறது—நயாபைசா வருகிறது! இந்நிலையில், பழம் பளமானது பற்றியும், கிழவி கியவியானது பற்றியும் காற்றைக் காத்தாக்கி, நாற்றை நாத்தாக்கி விட்ட கொடுமை பற்றியும் எடுத்துப் பேசுவது சாமான்யர்களுக்கே ஏற்றதாகாது என்றால், பேராசிரியர்களுக்கே இவ்வளவுதான் கூறமுடியும் என்றா நாம் மனஅமைதி கொள்ளமுடியும்! கேட்டால், இதனையும் கூறாது சேது(ப்பிள்ளை) பெரும் பேராசியர் வையாபுரி(ப்பிள்ளை) யாக வடிவமெடுத்து விடுவாரோ, என்றல்லவா அச்சம் பிறக்கிறது எழுப்பி விடாதே இவனும் வெளியே போய்விடப் போகிறான், என்று கூறின பிரன்ச்சு அமைச்சன் போலல்லவா, ஏதோ, இதனையாவது பேசுகிறாரே என்று எண்ணிக்கொள்ள வேண்டி இருக்கிறது. ஏனெனில் இது மிகப் பெரியவர்கள் மிகத் துணிவுடன் மிகப் பெரிய உண்மைகளை மிகச் சாமர்த்தியமாக மறைத்துவிடும் காலமாக இருக்கிறது! காலமாகவா? மிகப் பெரிய மனிதராவதற்கு, இஃதொன்றேயன்றோ, வழியாகவே அமைந்து விட்டிருக்கிறது.

தம்பி, பணிக்கர் தெரியுமல்லவா உனக்கு! சீனாவிலும், ஈஜிப்டிலும், பணியாற்றிய பெரியவர். அவர் கூறுகிறார் துணிந்து, மொழி, பண்பாட்டுக்கு உயிர் என்கிறார்கள், மொழி மூலமாகத்தான் பண்பாடு உருவாகிறது வளருகிறது என்கிறார்கள், அது தவறு, பண்பாட்டினை எடுத்துக்கூறும் முறைகளில் மொழி ஒன்று. அவ்வளவு தான்! என்கிறார், கூறிவிட்டு, மொழிவழி அரசு கேட்பது தவறு, மிகப் பெருந்தவறு! என்று பேசுகிறார். அவர் சென்னையில பல்வேறு இடங்களில் பேசியிருப்பதிலிருந்து, அவர் மொழிவழி அரசு கேட்கவில்லை என்பது மட்டுமல்ல, ''எனக்கு என்ன வழி?'' என்று நேரு பண்டிதரைக் கேட்கிறார் என்பதும் நன்றாகத் தெரிகிறது.

'மொழிக்கும் பண்பாட்டுக்கும் தொடர்பு இல்லை' என்று துணிவுடன் கூறுகிறார் பணிக்கர்.

பண்பாடு, பாரதத்தில் இருக்கிறது. இராமாயணத்தில் இருக்கிறது. வங்க மொழி மூலம் ஓர் பண்பாடு, மராத்தி மூலம் மற்றோர் பண்பாடு, தமிழ் மூலம் தனியானதோர் பண்பாடு ஏற்பட்டுத் தழைத்திருக்கிறது என்று கூறுவது தவறு என்கிறார். மொழி குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கக்கூடிய ஓய்வோ வாய்ப்போ பெற முடியாத அளவுக்கு, உலகு எங்கணும் ஓடோடிச் சென்று, உபசார மொழிகளைச் சொறிந்து உச்சி ஏறி நிற்கும் தலைவர்களுடன் உறவாடிடும் பணிக்கர், "தொல்காப்பியம் என்றோர் ஏடு உண்டு ஐயா! அது எமது தொன்மையான பண்பாட்டினை உருவாக்கிய கருவூலம்" என்று கூறினால், அவர் 'ஒரு சர்வதேச ரீதியான! 'புன்னகையை வருவித்துக்கொண்டு, இதெல்லாம் பழைய—கஞ்சி என்று கூறிவிடுகிறார்! மொழியின் தொன்மை மென்மை, வளம், இவைகள் இடதுக ரத்தால் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியன என்கிறார். வலக்கரம் கொண்டோ, இராமாயண பாரதச் சேற்றிலே அமிழ்ந்து கிடக்கும் செந்தாமரை இதழ்களைப் பொறுக்கி எடுக்கும் பணியிலே ஈடுபடுகிறார். பெரியவர்! எனவே பெருந்துணிவுடன் இவ்வண்ணம் பேசுகிறார்! பேராசிரியர்களோ, 'ழ'கரம் பாழ்பட்டு விட்டதே. 'ற'கரம் 'ட'கரமாகி விட்டதே என்ற கவலையில் தங்களை மறைத்துக் கொள்கிறார்கள்!

இமயம் முதல் குமரிவரை, பணிக்கர். இராமனையும் கிருஷ்ணனையும் பார்க்கிறாராம். 'பாரதம்' முழுவதும் பகவத் கீதை இருக்கிறதாம். எனவே, மொழிகளைக் கடந்து ஓர் பண்பாடு இருந்திடுவது புலனாகிறதாம்.

எப்படி, வாதம்? வாதத்தின் திறத்தை அல்ல தம்பி நான் கவனிக்கச் சொல்வது அந்தத் துணிவைக் கவனித்தாயா! இராமனும் கிருஷ்ணனும், இமயம் முதல் குமரிவரை இருக்கிறார்கள்—எனவே மொழி வழி அரசு கேட்பதோ, மொழி வழி பண்பாடுகள் அமைகின்றன என்று கொள்வதோ கூடாது என்று வாதாடுகிறார்—இந்தத் துணிவு, எவரிடம் காட்டப்படுகிறது என்று கவனித்தாயா தம்பி! இங்கு, திருஇடத்தில்! திருஇடத்தில் மட்டுந்தான்!

லிஸ்பனிலிருந்து லெனின்கிராட் வரையில், இலண்டனிலிருந்து ஜிப்ரால்டர் வரையில், ஆட்டவாவிலிருந்து அடிலெய்ட் வரையில், என்று இப்படி குறுக்கும் நெடுக்குமாக பல கோடுகள் கீறிக்காட்டி, நீயும் நானும் கூறமுடியும். இங்கெல்லாம் ஏசுநாதர் தெரியும்!

பைபிள் படிக்கப்படுகிறது! எனினும் இங்கெல்லாம் ஏசுவும் மேரி அன்னையும் தெரிவதால், பைபிள் இங்கெல்லாம் புனித ஏடாக இருப்பதால், ஒரே பண்பாடுதான் இருக்கிறது என்று அறிக, எனவே ஒரே அரசு அமைதலே பொருந்தும் என்று உணர்க என்று கூறிடவும், அமெரிக்கா, கானடா, மெக்சிகோ, பிரேசில், அர்ஜெண்டினா, இங்கிலாந்து, டென்மார்க், நார்வே, ஸ்வீடன், ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி என்றெல்லாம் தனித்தனி அரசுகளாக ஆகாது ஒரே பண்பாடு, ஒரே அரசு என்று பணிக்கர் அங்கு எங்கும் பேசத் துணிவு கொள்ளமாட்டார். இங்குதான் எதையும்பேச எவரையும் அனுமதித்து விடுகிறோமே! பேசுகிறார்!

ஜாதி—வர்ணாஸ்ரமம்—சுவர்க்கம்—இவைபோன்ற முறைகளே எமக்கு உரியன அல்ல, எனவேதான எமது மொழியில் அச்சொற்களே இல்லை, என்று புலவர் பெருமக்கள் கூறுகின்றனர்.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வாணிபம் எமது முறையல்ல. எமது இலக்கியம் காண்போர் இதனினை அறிவர் என்று புலவர் பெருமக்கள் பேசுகின்றனர்.

எமது நிலமே, ஐந்தாகத் தரப்பட்டிருக்கிறது.
எம்மிடம் திணை ஒழுக்கம் உண்டு

எமது ஆட்சி முறை போர் முறை யாவுமே தனியான பண்பாடு விளக்கமளித்திடும்.

இவ்விதமெல்லாம் பேசுகின்றனர்—முத்தமிழ் என்று யாம் இயல், இசை, நாடகம் என்று கூறும் நிலை பிற மொழியாளருக்கு இல்லை என்று கூறிப் பெருமிதம் கொள்கின்றனர்.

எமக்கென ஓர் மொழி, அம்மொழி வழி எமக்கென்றோர் பண்பாடு, அப்பண்பாட்டுக்கு உறைவிடமாகவும் உள்ள ஓர் அரசு— இவற்றினுக்கெல்லாம் எம்மிடம் சான்றுகள் உள்ளன என்று சாற்றுகின்றனர். எனினும் இவர் தம் சான்றுகளைச் சருகு என்கிறார். சேற்றிலே சந்தன மணம் கமழ்கிறது என்கிறார், துணிந்து பணிக்கர்:

சமூகம் ஒரு விசித்திரமான வேதனைக் கூண்டு அதில் ஏழைகள் கைதிகளாகிறார்கள். அவர்களைத் தண்டிக்கவும் கண்டிக்கவும் பணம் நீதிபதியாகிறது.

'காண்டேகர்.'

அறிவு அறை போகிய பொறி அறுநெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!

என்பதில் காணக்கிடக்கும் 'ற'கரத்தின் பெருமையில் பேராசிரியர் நீந்திக் களித்திடுகிறார்—இன்று இறைமுறை பிழைத்தோன் வாயிலோனாக உள்ள பணிக்கர்கள் கண்ணீர் பொழிந்திடும் கண்ணகிகளை ''வழக்காடவும் துணிந்தனையோ! அவன் தலை வெட்டுண்டது போல உன் நாவும் வெட்டுப்பட வேண்டியோ, எமது கொற்றத்தினைக் குறைபேசி நிற்கிறாய்'' என்று கேட்கின்றனர். நமது பேராசிரியர்கள் அந்த வாயிலோன் எது செய்யினும் பரவாயில்லை, 'ழ'கரம் பாழ்படாது இருக்கிறதா என்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

லோக்சபா—ராஜப்பிரமுக்-ராஷ்டிரபதி-நயாபைசா! இவ்வண்ணம் படை எடுக்கின்றன, வழக்கில் நடமாட வேண்டிய சொற்கள்! 'ழ'வும் 'ற'வும் மட்டுமா, மொழியே பிழைப்பது கடினம் என்று நிலை பிறந்திருக்கிறது. கேட்கும் உரிமை உணர்ச்சி, அதற்கான உள்ள உரம் எழக்காணோம்! இரயில்வே நிலையங்களில் இந்தி, அஞ்சல் அட்டைகளில் இந்தி, நாணயங்களில் இந்தி, அலுவலகங்களின் பெயர் பொறிப் பலகைகளில் இந்தி, பட்டாளத்தில் இந்தி-என்று எங்கும் இந்தி நுழைக்கப்படுகிறது! ஆட்சி மன்றங்களிலிருந்து அங்காடிவரையில் இந்தி அரசோச்சக் கிளம்பி விட்டது. கேட்பார் இல்லை!

''தமிழ் இலக்கியம் எதையும் சார்ந்திருப்பதன்று. கலாச்சார உபயோகத்தில் அது தனித்து இயங்கவல்லது.

இந்திய இலக்கியங்கள்பற்றி, தென் இந்தியாவலிருந்தே அதுவும் திராவிடர்கள் மூலம் முக்கியமாகத் தமிழ், மலையாளம் பேசும் மக்கள் மூலம்தான் ஐரோப்பாவில் அறிய முடிந்தது.

17-வது 18-வது நூற்றாண்டில், தமிழ் சமஸ்கிருதத்தைவிட அதிகம் முன்னேறி இருந்தது.

தமிழ்மொழி தவிர மற்ற மொழிகளெல்லாம் சமஸ்கிருதக் கலப்புடையன.''

பிலியோஜாத் எனும் பிரன்ச்சு நாட்டு, மொழித்துறை ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

தம்பிக்கு 'திராவிட நாடு' 11-5-55

நாம் யாரையும் அடக்கி ஆளமாட்டோம். அதே நேரத்தில் வேறு யாருக்கும் நம்மை அடக்கி ஆளவும் அனுமதிக்க மாட்டோம்.

'சன்யாட்-சன்

அண்ணா ஓர் அழியா பெட்டகம்

கவி. எஸ். பி. சந்திரசேகரன்.

காஞ்சி யெனும் நாடுதனில்
மலர்ந்தெழுந்த
குறிஞ்சிப் பூவாம்—அண்ணா!
மக்கள் நெஞ்சம் தனில்
என்றும் இடம் நீங்கா
மாண்பான மன்னர்—அண்ணா!
தான் என்ற கர்வம் கொள்ளாமல்
தன்னடக்கமது தவறாமல்
தரணியில் வான்புகழ் சூடி
வாழ்ந்தவராம்-அண்ணா!
தன்னன்பை பிறர்க்கு ஈந்து
நற்பண்பாள் உயர்ந்தவராம்-அண்ணா!
தம்பி பலருக்கு
பகுத்தறிவு பாலூட்டி
தமிழகத்தை வளர்த்தவராம்—அண்ணா
என்புமிருந்தாலும்
ஏழைக்கெடுத்துதவிய
பொன்னுள்ளம் கொண்ட
தர்மத் தலைவனாம்—அண்ணா!
திராவிட நாடு செழித்திடவே
நற்பணிகள் பல புரிந்தவராம்-அண்ணா
நாடு நாடுயென்று மக்களுக்காக உழைத்து
தனது வீடு வாழ்வுதனை தமிழகத்திற்கு
அற்பணித்துச் சென்றவராம்-அண்ணா
அழிவுகள் எத்தனை
இனியிங்கு வந்தாலும்
என்றுமறியாத பெட்டகம் அண்ணா!

சொத்து சொத்து என்று அங்கலாய்க்கிறோமே அப்படி என்றால் என்ன தெரியுமா? மற்றவர்களுடைய உழைப்பை நம்முடைய பணமாக மாற்றிக் கொள்ளும் ஒரு திருட்டுத்தனம்தான் அது! வேறொன்றுமில்லை.

'டால்ஸ்டாய்'

சென்னை-600 093
217210 J4
N92ICN
N93.1.1

புரட்சிக் கவிஞர்

கவிஞர் மங்களம் இளம்பரிதி.

கீழ்த்திசையில் சூரியன்மேல் எழுந்து விட்டான்!
கிழித்துவந்த ஒளிவெள்ளம் இருட்டை விரட்ட;
கிழக்குத்திசை நாட்டினிலே தோன்றல் தோன்றி
கீர்த்திபெற்று விளங்கிடவே கவிகள் தந்தான்!
வாழ்க்கைமுறை கவிதையிலே வகுத்துத் தந்தான்!
வளர்கவிஞன் பாரதியின் படையில் மூத்தோன்!
வாழ்க்கெல்லாம் பேரிடியாய் வந்து வாய்த்தான்!
உணர்வினிலே உணர்ச்சிதந்த ஒளியின் கோமான்!
தேர்க்கவிஞன் பாவேந்தன் தெற்கை வென்றான்
தென்றலோடு தேன்மனத்தை கவியில் குழைத்து
தர்க்கமுறை பட்டறிவை பாட்டில் வளர்த்தான்!
தண்டமிழில் வண்டாகி தரணி கண்டான்!
கற்குமுறை கற்பிக்க பள்ளி சென்றான்!
கற்கும்வழிக் கவிதைகளை கலையாய் படைத்து
நெற்குவியல் களஞ்சியமாய் நிறைய கவிகள்
நெறிநிறை திலகமதாய் நெடியோன் இட்டான்!
கருமுகில்கள் கருக்கொண்டு மோதும் போதும்
கலைமான்கள் கொம்பிரண்டு பொ(தும் போதும்
எரிமலையின் அழல்கிளம்பி கக்கும் போதும்
எரிதழலின் அணுக்கதிர்கள் வீசும் போதும்
உறுமுகின்ற அரிமாக்கள் சண்டை போதும்
உரிமைஒலி படைக்கலனாய் அதிரும் போதும்
வருகின்ற ஒலியெல்லாம் சேர்த்து வெல்லும்
வாய்த்தகவி பாவேந்தன் கவிதை கீதம்!
நூற்றாண்டு நூறாகிச் சென்ற போதும்
நூற்றாண்டில் ஒருகவியாய் வாய்த்த கவிஞன்
ஈற்றாகி இன்னும்பல ஆண்டுகள் கடந்தபோதும்
ஈடுஇணையில்லாத கவிஞன்இவன் ஒருவன்தானே!
காற்றாடும் அலையெல்லாம் இவன்கவியே வெல்லும்
ககனத்தில் கானகத்தில் புவனத்தில் எங்கும்
நாற்றாக வாழ்ந்திருப்பான்! நாடுபோல
நூற்றாண்டுக் களுக்கடங்கா கவிஞன் வாழ்க!
வாழ்க!

அறிஞர் அண்ணாவின் தன்வரலாறு

[11]

— Dr. CNA. மரிமளம் —

விவாதங்கள் என்றால், நான் வெகுண்டு விடுபவனல்ல; வரவேற் பவனே. அதிலும் கற்றுணர்ந்த நம் சேதுபிள்ளை அவர்களிடம் தமிழ்ப் பெரியாரும், சைவத்திருவினருமான தோழர் இராமசந்திரன் செட்டி யார் அவர்களின் தலைமையில், நீதிமன்றங்களுக்கு நீதிமான்களையும் நீதியுரைப்போரையும் தயாரித்துத்தரும் சட்டக்கல்லூரி மன்றத்தில், விவாதம் நிகழ்த்துவது மிக்க சந்தோஷம். விவாதம் மிக மேலான முறையினதாக இருக்கும்.

'தீபரவட்டும் 9—2—1943
அண்ணா ஆற்றிய உரை
சென்னை சட்டக் கல்லூரி மண்டபம்
பேராசிரியர் சேதுப்பிள்ளையுடன் அறிஞர் அண்ணா கம்பராமயணம் பெரியபுராணம்பற்றி சொற்போர்)

சேலத்திலே இந்த நிகழ்ச்சி நடைபெறப்போகிறது. நீ வரவேண் டும் என்று எனக்கு அன்பழைப்பு வந்தபோது பத்திரிகைகளிலே நான் இரண்டு செய்திகள் கண்டேன். ஒன்று : சின்னாட்களில் சேலத்தில் இலக்கியப் பாதுகாப்பு மாநாடொன்று, நடத்தப் போவதாக ஓர் அறிக்கையும். நாங்கள் புராண ஒழிப்பு கிளர்ச்சி செய்வது 'பாபம்' என்று ஓர் எச்சரிக்கையும் கண்டேன்......

(14—3—43 மாலை 6 மனிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்க பாடசாலை மண்டபத்தில் நாவலர் சோமசுந்தர பாரதி யாரும் அண்ணாவும் கம்பராமயணம், பெரியாணம் பற்றி சொற் போர் நடத்தினார்.)

நாடக அபிமானிகளும், நாடக கலையில் ஈடுபட்டுள்ள தோழர் களும், இசைவாணர்களும் கலா ரசிகர்களும் நிரம்பியுள்ள இந்த மாநாட்டிலே எனக்கு பேச ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நாடக கலையின் முன்னேற்றத்திற்காக இந்த மாநாடு நடைபெறுகிறது. காலையிலே தலைவர் சர், சணமுகம் அவர்கள் சொற்பொழிவாற்றினார். வேறு பல அன்பர்களும் பேசினர்; இயலை வளர்க்கவும் இசையை வளர்க்கவும் பல அமைப்புகள் இருக் கின்றன. நாடகக்கலை வளர்ச்சிக்கான அமைப்பும முயறசியும்

இல்லை எனவே எனது நண்பர் தோழர் சிவதானு இதற்கான ஓர் தனி மாநாட்டை முதன் முறையாக கூட்டியது பற்றி நான் அவரைப் பாராட்டுகிறேன்.

அறிஞர் அண்ணா தமிழ் மாகாண நாடகக்கலை அபிவிருத்தி
மாநாடு ஈரோடு 11—2—1944

சேலத்திலே (ஆகஸ்ட் 1944)27-ந் தேதி நடைபெற்ற மாநாட்டிலே தென் இந்திய நல உரிமைச் சங்கத்திற்கு, திராவிடர் கழகம் என்ற புதுப்பெயரும், பட்டம் பதவிகளை விட்டொழித்து விட்டு, நாடு மீளவும் கேடு தீரவும் பணிபுரியும் அணி வகுப்பினை அமைக்கும் திட்டமும் ணர்ச்சியும் வேகமும் கொண்ட பல்லாயிரக் கணக்கான திராவிட தீரர்கள் ஆதரவைப் பெற்றுவிட்டன. வெற்றிகரமாக நடந்தேறிய அந்த மாநாடு வெறும் வைபவ மென்றோ ஒரு குழுவின் வெற்றியென் றோ நாம் கருதவில்லை. ஒரு இயக்க வளர்ச்சியிலே முக்கியமான குறிப்பிடத்தக்க ஒரு கட்டம் என்றே கருதுகிறோம்...

இலட்சிய வரலாறு

தோழர் புலவர் குழந்தை தமிழர்—தமிழ் இனம் விழிப்புற்று வீறு கொண்டு விடுதலை பெற்று வீர மக்களாய்த் தன்னாட்சி தனியா உரிமையுடன் வாழவேண்டும் எனும் நோக்குடையவர்.

புலவர் குழைந்தையின் (இராவண காவியம் முன்னுரை)

ஒரு மாதத்திற்கு முன் சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந் தொகையில் ஓர் உவமை படித்தேன். இந்தக் காலத்தில் கற்பனை நிலை எவ்வளவு தூரம் கயமைத் தனத்திற்கு போயிருக்கிறது என்பதை ஊகித்தேன். வித்தியாசத்தைப் பாருங்கள்! இந்தக் காலத்துப் புலவர் எந்த கருத்தை ஓர் அந்தாதி மூலமாகவோ, வெண்பா மூலமாகவோ விளக்குவார்களோ, அதைக் குறுந்தொகை ஆசிரியர் ஒரே அடியில் கூறிவிட்டார்; அந்த அடிதான் 'கையில் உமையன் என்பதாகும்.

அறிஞர் அண்ணா 1945-ம் அண்ணாமலை பல்கலைக் கழக
பட்டமளிப்பு விழா அரங்கு
—பாரதிதாசன் படத்திறப்பு விழா பேச்சு

இந்த தொடக்கவிழா சொற்பொழிவை நான்தான் ஆற்ற வேண்டும் என்று கேட்டபோது நான் சிலகாலமாக அதிகமாக எந்தப் பொதுக் கூட்டங்களிலும் பேசுவதில்லை. ஆகவே இந்தக்கூட்டத்திற் கும் வர இயலாதவனாக இருக்கிறேன் என்று கூறினேன். ஆனால் எனது மாணவ நண்பர் மதியழகன் நான் வரத்தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்தார். நான் யோசித்தேன், சரி என்று சம்மதம் தந்தேன். காரணம் நான் இந்த விழாவில் கலந்து கொண்டு சொற் பொழிவு ஆற்றுவதன் மூலம் ஒரு சில சந்தேகமான பிரச்சினைகள்

தீரும் என்பதேயாகும். நான் பேச ஒப்புக் கொண்டு கொடுத்த தலைப்பு 'நிலையும் நினைப்பும்'

அண்ணாமலை பல்கலை கழக தமிழ் பொதுப் பேரவையின்
சார்பில் பட்டமளிப்பு விழா மணடபத்தில்
அண்ணா ஆற்றிய உரை 23-9-1947

பல்கலை கழகப் புலவர் தோழர் கா. சுப்பிரமணியம் எம்.ஏ., எம்.எல்., (கா. சு. பிள்ளை) அவர்களின் மறைவால் வருந்தாத தமிழ் மக்கள் ஒருவரும் இரார். என்பது எனது துணிவு. அவர் அறிஞருக்கு ஆசிரியராகவும், புலவர்களுக்கு தலைவராகவும், தன்னுணர்வாளர் களுக்கு அன்பராகவும் இருந்த காரணத்தால்.

திராவிட நாடு 20-5-1946

(திரு. தேவ நேயப்) பாவாணர் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும், இடைவிடாத நற்றொண்டு ஆற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர். அவருடைய புலமை தெளிவும் துணிவும் மிக்கது.

வாழ்த்துச் செய்தி 7-10-1967

வர்ணனைகளும் ஆச்சர்ய சம்பவங்களும் திடுக்கிட வைக்கும் தகவல்களும் நிரம்பிய அலாவுதீனும் அற்புத தீபம் என்ற கதையைப் படித்தபோது அதிலேயே சொக்கிப்போய் அதைவிட சிறந்த புத்தகமே கிடையாது என்று நம்பிய பருவம்—எனக்கு மட்டுமல்ல—உங்களில் பலருக்கும் உண்டு. அந்த சிறு பிராயத்தில் அந்தக்கதை நிச்சயமாக நமது உள்ளத்தை கவர்ந்தது...... நாரதரின் கானம் பற்றியோ, தேவலோக காட்சி பற்றியோ சுவை தரும் விதமாகத் தீட்டப்பட்ட ஏட்டினை படிக்கும்போது ஒருவகை இனிமை ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் புதிய எண்ணம், விழிப்பு செயலாற்றும் தன்மை ஏற்படுவதில்லை. பக்தி பரவசத்தோடு அத்த ஏடுகளை படிப்போரும், போய் பார்த்துவிட்டே வரவேண்டும் நாரதரை என்று பயணப்படுவதில்லை. மலேயே பற்றிய வரலாற்றுப் புத்தகத்திலே சுவை இருக்காது எனினும் படிப்பவர்கள் வசதி கிடைத்தால் அங்கு போய் வரலாம் என்று எண்ணங் கொள்ளவும் செயலாற்றவும் முடிகிறது. சுவை கருதி மட்டும் படிக்கும் பருவத்திலே நம்ப முடியாத நிகழ்ச்சிகள் சாதிக்க முடியாத செயல்கள் கொண்ட கதைகள் உள்ளத்தை கவருகின்றன. இந்த வரிசையில் விக்ரமாதித்தன் கதை போன்றவைகள்......

அந்தப் பருவத்தைக் கடந்த பிறகு பயன் தரும் ஏடுகளையே மனம் நாடுகிறது பொழுது போக்குடன் பயனும் தந்து, சுவையும் தந்த புத்தகங்களிலே 'பிரதாப முதலியார் சரித்திரத்தை குறிப்பிடுகின்றேன்—என் உள்ளத்தை கவர்ந்த ஏடுகளிலே அது

ஒன்று...... புராண இதிகாச கதைகளை நான் பள்ளிப் பருவத்திலே படிக்க நேரிட்டபோது, அவை தேவையற்றவை என்ற கருத்தோ. அல்லது நம்மால் சாதிக்க முடியாதவைகளை கொண்ட ஏடுகள் என்ற எண்ணம்தான் ஏற்பட்டது......... நீண்ட காலம் அந்த ஏடுகளோ, அவைகளில் குறிப்பிடப்பட்ட கருத்துக்களோ மனதில் தங்கியிருந்த தில்லை. தினைப்புனத்து பட்சிகள் போல அந்தக் கருத்துக்கள் கூட்டம் கூட்டமாக வரும். உள்ளத்தை தொடும். ஆனால் அறிவுத் தெளிவு எனும் ஆலோலம் கேட்க கேட்க அவை பறந்தே போய்விடும் எனக்கு மட்டுமல்ல சராசரி அறிவுள்ள எவருக்கும்.

...ஓசை நயமும், பொருள் செறிவும் கொண்ட புத்தகங்கள் மனதை கவரும் இந்த வரிசையில் என் மனதை மிகவும் அதிகமாக ஈர்த்த புத்தகங்களிலே கலிங்கத்துப் பரணியை முக்கியமானதாக கருது கிறேன்...சிலப்பதிகாரம் உள்ளத்தை கவர்ந்திடத்தான் செய்கிறது ஆனால் பருவம் மாறுகிறது—புத்தகப் பட்டியலும் மாறுகிறது.

'அபட்' எழுதிய நெப்போலியன் வரலாறு 'கிப்பன்' எழுதிய 'ரோம் சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்' எனும் இரு ஏடுகள் என் மனதை பெரிதும் கவர்ந்தன.

'சைமன் பொலிவர்' 'கரிபால்டி' ஆகியோர் பற்றிய புத்தகங்கள் என்னை பெரிதும் கவர்ந்திருக்கின்றன...அலெக்சாண்டரின் ஆற்றல் ஜூலியஸ் சீசரின் வீரம், நெப்போலியனின் போரார்வம், கரிகாலன், ராஜராஜசோழன், குலோத்துங்கன், ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன், ஆடலரசன் ஆட்டனத்தி...கட்டபொம்மு, தேசிங்குராசன், நரசிம்ம பல்லவன் காலத்தில் காஞ்சீபுரத்திலிருந்து பம்பாய் அருகி லுள்ள வாதாபி எனும் நகர் மீது படையெடுத்துச் சென்று சாளுக்கிய மன்னன் புலிகேசியைச் தோற்கடித்த பரஞ்சோதியின் பேராற்றல் பற்றிய சிறு குறிப்புகள் என் மனதைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அறியாமை இருளை கிழித்தெறிந்த அறிவுச் சுடர் ஆதிக்கக் கோட்டையை தகர்த்தெறிந்த பகுத்தறிவு படைத்தலைவன், வக்ரபுத்தி கொண்ட வைதீகத்தின் வைரி 'வால்டேர்', அரசாங்கம் என்னை அழிக்க முயற்சிக்கலாம், படை பலம் பாய்ந்து வரலாம், உலகே கேலியும் செய்யலாம், எனினும் நீதியை நிலைநாட்டி, ஏழையின் கண்ணீரை துடைத்தே தீருவேன் என்று வீர முழக்கமிட்டு, போரிட்டு வெற்றி கண்ட இலக்கிய வீரன் 'எமிலி ஜோலா' ஆகியோரின் வரலாறும், அவர்கள் அளித்த அறிவுரைகளையும் கொண்ட ஏடுகளை முக்கியமானதாக கருதுகிறேன். இதே முறையில் 'இங்கர்சாலின்' பகுத்தறிவு வசன கவிதைகள் எழுச்சியூட்டி என் மனதைக் கவர்ந்திருக் கிறது.

புத்தர் துறவு. சாக்ரடீஸ் வழக்கு மன்றத்தில் நின்று பேசுவது. ஏசு சிலுவையில் அறைபடுவது, இளங்கோவடிகளின் துறவு, மணி மேகலையின் மன உறுதி. கண்ணகியின் கேள்விக் கணைகள் மாதவியின் மன நெகிழ்ச்சி, அசோகனின் துக்கம், சகுந்தலையின் சோகம் போன்ற நிகழ்ச்சிக் கோவைகள் எப்போதுமே நெஞ்சை நெகிழச் செய்வன.

...பல்வேறு துறைகளிலே உள்ள பிரச்சினைகளிலே தெளிவும், பண்பாட்டுக்கு ஓர் விளக்கமும், சமுதாய அமைப்பு முறை, அரசு அமைப்பு முறை அறநெறி ஆகியவை பற்றிய கருத்துரையும் ஒருங்கே கொண்டதாய், மக்களை அறியும் ஆற்றலும், அறமும் கொண்டவர்களாக்க வல்லதாய் அமைந்துள்ள பெருநூல் இன்று நமக்கிருப்பது திருக்குறள்.

அண்ணா-வானொலி உரை
என்னை கவர்ந்த புத்தகங்கள் 1948

தமிழ் நாட்டைப்போல் வேறு எந்த நாட்டிலும் அந்த நாட்டின் மொழியல்லாத வேறு மொழியில் சங்கீதம் பாடுவதைக் கேட்க முடியாது. ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் தங்கள் தாய் மொழியிலே எல்லா கலைகளையும் வளர்ச்சி செய்து வருகின்றனர். இல்லாத கலைகளையும் புதிதாக ஆக்கி வருகின்றனர் தமிழைப்போல தாய் மொழிக் கலை உணர்ச்சியற்றவர்களை எந்த நாட்டிலும் காண முடியாது.

அறிஞர் அண்ணா
தமிழரின் மறுமலர்ச்சி

தமிழ் நாட்டிலே நலல தமிழிலே மேடையில் பேசமுடியும் என்பதை முதன்முதலில் பேசிக் காட்டிவர் திரு.வி.க. (திரு.வி.கலியாண சுந்தரனார்) அழகிய தமிழிலே அரசியலைப் பற்றியும் எழுதமுடியும் என்பதை முதலாவதாக எழுத்தில் காட்டியவர் திரு.வி.க. அரசியலில் புயலாகவும் தமிழில் தென்றலாகவும் இருப்பவர் நம் திரு.வி.க. நூல்களிலே நுண்ணிய உரையை தீட்டியவர் நம் திரு வி க. எதிர்கால உலகத்துக்காக சிறந்த ஏடுகளை தயாரிப்பவர் நம் திரு.வி க.

அண்ணாவின் சொல்லோவியம்

நான் அவரோடு (மறைமலையடிகள்) நெருங்கிப் பழகியவன் அல்லன். அவரோடு எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பெல்லாம் இந்த நாட்டில் முதலில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது தான்.

...இப்டி சொல்லும்போது அண்ணாதுரை! மறைமலையடிகள் சமயத் துறையில்—சைவத்தில் நம்பிக்கை வைத்திருந்தாரே உங்களுக்கு அது சம்மதமா என்று சிலர் கேட்கக்கூடும். அன்பும் அருளுமே சைவம் என்றால்—நான் மிகச் சிறந்த சைவன். ஆண்டவன் ஒருவனே என்பதுதான் சைவம் என்றால்—நான் மிகச் சிறந்த சைவன்

மேடைப் பேச்சு 24—8—1958

ஆரிய மாயை வழக்குக்காக பல முறை முக்கியமான அலுவல்களையெல்லாம் விட்டு விட்டு திருச்சிக்கு சென்று வருகிறேன். அடிக்கடி வாயிதா போடுகிறார்கள். கம்பராமாயண சீலர் கலாரசிகர் தோழர் பாஸ்கரத் தொண்டைமானை தான் இந்த வழக்கை விசாரிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆரிய மாயைக்கு அவர்கள் தடை விதித்து என்னை சிறையில் தள்ளினால் மறுநாளே ஆயிரக் கணக்கான துண்டு பிரசுரங்கள் மூலம் ஆரிய மாயை அச்சாகி எங்கும் பறக்குமே! சர்க்கார் இப்போது ஆரிய மாயை இலட்சிய வரலாறு, இராவண காவியம் போன்ற நல்ல நூல்களை படித்து வருவது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

''அண்ணாத்துரை உள்ளதைத்தான் எழுதினான்'' என்பது அவர்களுக்கு நன்று தெரிந்ததே. சர்க்கார் நூல்களின்மீது தடைவிதிப்பதை விட்டு விட்டு முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியங்களில் ஈடுபடுவது நல்லது.

மேடைப்பேச்சு
சென்னை மாவட்ட தி.மு.க.
முதல் மாநாடு 1950

அவருடைய (வ. ராமசாமி ஐயங்கார்) சுந்தரி [எனும் புதினம்] 1917-ல் பிறந்தவர். சுயமரியாதை இயக்கம் தமிழகத்தில் தவழ்வதற்கு தொடங்கும் நாட்கள் அவை என்று கூறலாம். அந்த நாளிலே வெளி வந்த 'சுந்தரியில்' காணப்படும் கருத்துக்கள் எப்படிப்பட்டவை என்பதை காணும்போது தான்—வ.ரா. அக்கிரகாரத்து அதிசயப் பிறவி என்று நாம் கூறமுடிகிறது.

'திராவிட நாடு' 18—5—1947

இலக்கியம் வடச் சொல்லா? தமிழ்ச் சொல்லா? என்ற விவாதத்தைப்பற்றி ''நண்பர் கருணாநிதி குறிப்பிட்டபோது ஒரு பெரி Hydrojen குண்டை வெடித்தார், இளைஞர்கள் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டுமென்று'' ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் பூரிப்படைந்து சொன்னார்கள்.

அறிஞர் அண்ணா
கோவையில் 27-5-1950
முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில்

கல்லூரி முதல்வர் (சென்னை தியாகராயர் கல்லூரி) ஆற்றிய வரவேற்புரையில் நானும் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார், உங்கள் கல்லூரி நடத்துகின்ற கலை விழாவிலே நடிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததற்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் நாடகம் ஆடி கல்லூரி வளர்ச்சிக்குக் காசு சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதே என்பது குறித்து வருந்தாமல் இருக்க முடியுமா?

அறிஞர் அண்ணா 9—8—51
சென்னை தியாகராயக் கல்லூரியில்

—தொடரும்—

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி 10 ஜூன் 1993

திரட்டு

இலங்கை அதிபர் விஜயதுங்கே திட்டவட்ட அறிவிப்பு. பிரேமதாசாவை கொன்றது புலிகளல்ல.

கொழும்பு மே-8 : இலங்கை அதிபர் பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதற்கு விடுதலை புலிகள்தான் காரணம் என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை என்று புதிய அதிபராக பொறுப்பேற்றுள்ள விஜய துங்கே கூறினார்.

நன்றி விடுதலை 8-5-93

இந்தி திணிப்பு பற்றி நடிகர் சந்தியராஜ்

நான் தமிழன். தமிழ் என் தாய்மொழி, அதுவே என் உயிரான மொழி என்றுதான் நாமெல்லாம் போற்றி புகழ்ந்து மனசுல பதிச்சிருக்க வேண்டும்.

ஆனால் இப்போ நமது தாய்மொழியை தன்னிகரில்லா தமிழை மெல்ல மெல்ல மறந்துகிட்டிருக்கோம். எங்கும் எதிலும் தமிழ் என்பது கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து எங்கும் இந்தி என்று சொல்லும் அளவுக்கு உள்ளது என்றே சொல்லக்கூடிய நிலை.

டி.வி. பெட்டியை தொட்டாலே போதும். இந்தி நாளாக கொட்டுது.

நன்றி : 'தினத்தந்தி'

அண்டை வீட்டு ஏழை பசியால் வருந்துவதை கண்டும், அவனை நோக்காது, பாலும் பழமும், தேனும் கொண்டு போய் விக்கிரகத்தின் தலையில் பொழிவாரின் பூசையை கடவுள் ஏற்றுக் கொள்வாரோ? ஒரு போதும் ஏற்றுக் கொள்ளார்.

திரு. வி.க.

நூல் வெளியீட்டு விழா

15—3—93 அன்று பாண்டியன் பதிப்பகத்தின் சார்பில் புலவர் பி. சி, கணேசன் எழுதிய ''வள்ளுவருடன் ஒரு சந்திப்பு'' என்னும் நூலை மலேசிய திருச்சுடர் கே. ஆர். இராமசாமி அவர்கள் வெளியிட்டார். முதல் நூலை ரீயூனியன் பேராசிரியர் குமாரசாமி முதற் படியினைப் பெற்றுக் கொண்டார். இரண்டாவது படியினை இந்தோனேசியா-ஜி சுப்பிரமணியம் பெற்றுக் கொண்டார். உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையேற்றார். விழாவில் புனிதம் மகேசன், புலவர் இளஞ்செழியன், இளம்பாரி உ. கருணாகரன், நீதிபதி சி. இராமகிருட்டிணன், பேராசிரியர் மது. ச. விமலானந்தன், திருக்குறள் அறிஞர் கப. பொ. இரத்தினம் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர். நூலாசிரியர் புலவர் பி. சி. கணேசன் ஏற்புரை வழங்கினார்.

இலங்கையில் தமிழர் பகுதிக்கு உணவு-பெட்ரோல் தடையை நீக்க விஜயதுங்கே சம்மதம்

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாணத்துக்கு அரிசி, பருப்பு, பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது. இதனால் தமிழர்கள் பட்டினி கிடக்கிறார்கள். இது பற்றி தமிழ் எம்.பி. ஜோசப். புதிய அதிபர் விஜயதுங்கேயை சந்தித்து எடுத்துச் சொன்னார். அதற்கு விஜயதுங்கே சம்மதித்தார்.

நன்றி 'தினகரன்' 12-5-93

நம்பிக்கை—அறியாமை—இவற்றின் விளைவாக ஏற்படுகிற சுடுகாட்டு அமைதியைவிட சுயசிந்தனை—பகுத்தறிவு—இவற்றின் விளைவாக ஏற்படுகின்ற கடும் புயலையும், கோடை இடியையும்தான் நான் விரும்புகிறேன்.

'இங்கர் சால்'

அண்ணா எடுத்த நடவடிக்கையை அனுபவசாலிகள் (!) ஏன் எடுக்கவில்லை?

அண்ணாதுரை எத்தனையோ ஜோரான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார் அவற்றில் பல பெயர் மாற்றங்கள்! இவற்றினூடே இரண்டு 'பெரிய' நடவடிக்கைகளும் எடுத்து விட்டார். இரண்டில் ஒன்று துணிகரமானது; ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம்; இன்னொன்று ஒழுங்கானது. மாவட்டக் கலெக்டர்களுக்குச் சுற்றறிக்கை.

''மாவட்டங்களின் முதன் மந்திரியோ அல்லது மற்ற அமைச்சர்களோ சுற்றுப் பயணம்செய்யும் போது, கலெக்டர்களோ இந்த பெரிய அதிகாரிகளோ அவர்களுடன் கூடவே சுற்ற வேண்டியதில்லை என்று முதல்வர்கட்டளையிட்டிருக்கிறாராம்.

புதிய திக்கில் நிர்வாகத்தையே திருப்பி விடும் ஒழுங்கான நடவடிக்கை இது.

''இதென்ன பிரமாதம் என்று எவராவது கூறுவாரானால், அது அரசியல் பொறாமையாகவே இருக்க முடியும்.

இவ்வளவு சாதாரண நடவடிக்கையை இதற்கு முன் இருந்த பெரிய அனுபவசாலிகள் ஏன் எடுக்கவில்லை?

எங்கு சென்றாலும் கலெக்டர்கள் தங்கள் பரிவாரங்களுடன் காத்திருந்து வரவேற்கும் பெருமையை இழக்க மனமில்லை என்பதைத் தவிர வேறு என்ன சமாதானம் கூறமுடியும்? எல்லோரும் என்னை உச்சிமேல் வைத்து மதிக்க வேண்டும்:

இந்தியாவில் தென்னாட்டு மாநிலங்களுக்கு எதிராக வடநாட்டு மாநிலங்கள் ஒன்று திரண்டு தென்னாட்டின் நலன்களுக்கு விரோதமாக அவர்கள் மீது குதிரை ஏற—ஆதிக்கம் செலுத்த வாய்ப்பிருக்கிறது என்பது யூகிக்கக் கூடியதே!

இப்படி வடநாடு தென்னாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துமானால் தென்னாடு வடநாட்டின்மீது போர்—தொடுப்பது—இந்தியாவில் உள்நாட்டுப் போர் மூளுவது இயற்கையே!

'டாக்டர் அம்பேத்கார்'

என்னையே மதிக்க வேண்டும் என்று ஆசைப்படாத அரசியல் வாதி உண்டா?

மக்கள் அண்ணாந்துபார்க்கக் கூடிய பெரிய அதிகாரிகள், அஞ்சி நடுங்கக்கூடிய போலீஸ் காரர்கள்ஒருவர்பின்னும் முன்னும் கூடவே ஓடி வருவதென்றால் சரதாரண மரியாதையா?

சாதாரணமான மற்றவர் களுக்கு—எவராயிருப்பினும்- அது கிடைக்கக் கூடியதா? பெரிய தொழில் சாம்ராஜ்யத்தையே நிலைநாட்டி அரசாளும் கோடீஸ் வரராக இருந்தாலும், அதிகாரி யைப் பார்த்தவுடனே அடங்க வேண்டியது தானே. அவரவர் தரத்திற்கு ஏற்ப!

அமைச்சர் பதவி அப்படியா? எவர் அமைச்சராக வந்தாலும், அதற்கு முந்தின நாள் அவர் எங்கு சுற்றியவராயிருப்பினும், வந்த நாளிலிருந்தே அதிகாரிகள் வளைத்துக் கொள்வார்களே?

சாதாரண நாலுமுழ வேட்டி, அரக்கைச் சட்டையுடன் விசுக்-விசுக்கென்று தாங்கித் தாங்கி நடக்கும் ஒரு நோஞ்சான் அமைச் சரின்முன் கட்டு மஸ்தான காக்கி உடுப்புக்காரர்கள், குழாய்-கோட்டு அதிகாரிகள்ஓடிவருவதை மக்கள் நேரில் பார்ப்பதென்றால்? சுற்றிலும் ஆடம்பரம்; உள்ளே மத்தியில் எளிமை-உடுப்பில் தான் எளிமை! எளிமையின் உள்ளுக்

குள்ளே உலகமெல்லாம் பணிந் தாலும் ''போதாது'' என்று அலையும் மேதை மனம்.

இந்த ஆடம்பர எளிமைதான் பொதுச் சேவையின் முடிவிடம் அரசியலில் பொதுச் சேவையில் துடிப்பவர்களின் பொதுக் குறி இந்த கௌரவத்தில் தான் ''இந்தப் பகட்டான பெரு மையை வேண்டபம் எனத் தானே ஒதுக்குவது சாதா ரணம் அல்ல. அது நிச்சயம் அசாதாரணமே,''

''சுதேச மித்திரன்''
வாரப்பதிப்பு
(14—5—67 இதழில்)

முதியவர்கள் அடைகிற வெற்றியைவிட இளைஞர்கள் அடைகிற தோல்வியோ இளைஞர்களின் ஆர்வத்தாலும் ஆவேசத்தாலும் தான் ஒரு நாடு முன்னேற முடியும். முதியவர்களின் ஆமை வேகச் செயல் களால் அல்ல.

'டிஸ்ரலி'

நடிகர் சத்யாராஜ் அவர்கட்கு பெரியார் திடலில் பாராட்டு

இன உணர்வுள்ள நடிகர் சத்தியராஜ் அவர்கட்கு சென்னை பெரியார் திடலில் பாராட்டு விழாவும் பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றது. அவரது தமிழ் இன உணர்வை பாராட்டி திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கீ. வீரமணி அவர்கள் பேசினார். பாராட்டுக்கு நன்றி தெரிவித்து பேசுகையில் நடிகர் சத்யராஜ் அவர்கள், இனிமேல் மூடநம்பிக்கையை வளர்க்கும் புராணப் படங்களில் நடிக்க மாட்டேன் என அறிவித்தார்.

வீராணம் :

ஜெயலலிதா முடிவுக்கு கருணாநிதி வரவேற்பு

தி. மு. க. ஆட்சி நிறைவேற்ற முன்வந்த வீராணம் திட்டம் சாத்ய கூறானதுதான் என்பது தெளிவாகி விட்டது என்று முன்னாள் முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதி தினமணி நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினார். வீராணம திட்டத்தை 12 மாதங்களுக்குள் முடித்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு வருவதாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்திருப்பது வரவேற்கத் தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நன்றி : தினமணி 11-5-93

பணம் மட்டும் குவிந்திருக்கும்போது, செருக்கு, பிறரை துச்சமாக எண்ணும் துடுக்கு ஏற்பட்டு விடும்...

ஆனால் பதவி கிடைத்து விட்டாலோ, எவரையும் எதுவும் செய்துவிட முடியும் என்ற இறுமாப்பு, வென் என்ன செய்துவிடமுடியும் என்கிற மண்டைக்கனம், எவனால் என்ன என்ற போக்கு எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிற பேச்சு, யாருக்கு நான் அஞ்சவேண்டும் என்ற நோக்குடன் நடவடிக்கைகள் இப்படி பலப்பல நோய்கள் ஒருசேர சூடி ஏறிவிடும். பதவியும் அதனால் கிடைத்திடும் அதிகாரமும் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்ற நினைப்பும் தடித்துவிடும். பிறகு நெரித்த புருவம், கனல் உமிழும் பார்வை, சுடும் சொற்கள்.

தம்பிக்கு கடிதம் 5-6-60

சான்றோர் பேரவை கலந்துரையாடல் கூட்டம்

சான்றோர் பேரவை எனும் அமைப்பை துவக்கும் எண்ணத்துடன், 'இலக்கிய வீதி' திரு. இனியவன் அவர்களும், 'மாணவர் நாகரிகம்' திரு. அருணாசலம் அவர்களும் சென்னை 'பிரீஸ்' உணவகத்தில் நடந்த 8-5-93 அன்று மாலை ஓர் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கலந்துரையாடல் கூட்டம் மாலை 5 மணி அளவில் 'இலக்கிய வீதி' திரு. இனியவன் அவர்கள் தொடக்கவுரையுடன் தொடங்கியது. சான்றோர் பேரவை என்று தொடங்க இருக்கிற இந்த அமைப்பு தூய நோக்கத்தை அவர் தெளிவாக எடுத்துரைத்தார். கட்சிக் கண்ணோட்டமின்றி, தமிழர் நலனை மட்டும் கருத்தில் கொண்டு இது இயங்கும்; நாட்டில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கும், அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கும், நல்லவை நடக்கும்போது மனம் திறந்து பாராட்டுவது அல்லது அல்லாதவை நடக்கும்போது, தவறை சுட்டிக் காண்பித்து திருத்த முயல்வது இந்தப் பேரவையின் பணி என்று விளக்கினார். சிலம்பொலி செல்லப்பனார், பல துறையைச் சேர்ந்த விற்பன்னர்கள் இதில் அங்கம் வகிப்பர். இனம், மொழி, நாடு இவைகளை மட்டும் கருத்தில்கொண்டு, கட்சி, ஜாதி, அமைப்பு இவைகளை மறந்து அவர்கள் தமிழர் மேம்பாட்டுக்கு பாடுபடுபவர் என்று விளக்கினார்.

அன்றைய கூட்டத்தில் சிலம்பொலி செல்லப்பனார், உவமைக் கவிஞர் சுரதா, திரு. அ. ச. ஞானசம்பந்தனார் திரு. முத்துப்பிள்ளை, திரு. அரு. சங்கர் திரு அறவாணன், திரு. குருவிக்காம்பை வேலு, டாக்டர் சி. என். ஏ. பரிமளம், திரு. இசை இறை சேரலாதன், புலவர் பண்ணன் இலக்கிய வீதி, இனியவன் 'மாணவர் நகலகம், அருணாசலம், திரு. வேம்பைய்யன், பாவலர் பல்லவன், கவிமாமணி முத்துக் கூத்தன், திரு. வீரமணி, தேனிசை செல்லப்பா, திரு. கலைவாணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பட்டை தீட்டிய வைரம்

வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவதுபோல், திருக்குறளை ஆராய, ஆராய, அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.

உவமைக் கவிஞர் சுரதா, திரு. அ. ச. ஞானசப்பந்தனார் திரு. முத்துப்பிள்ளை, திரு. அரு. சங்கர், திரு. அறவாணன், டாக்டர் சி. என். ஏ. பரிமளம், திரு. குருவிக்காப்பை வேலு, திரு. வீரமணி ஆகியோர் பேசும்போது பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பேரவைக்கு சிலப்பொலி செல்லப்பனார் தலைமை, யேற்பார் என ஒரு மனதாக முடிவு செய்து அறிவிக்கப்பட்டது. இன்னும் ஒரு திங்களுக்குள் கூட ஒரு குழு அமைத்து செயல்பாடுகளுக்கு வடிவம் அமைப்பது என முடிவு செய்து பாவலர் பல்லவன் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

தமிழறிஞர்கள் கைதானார்கள்

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. தலைமையில் எழுச்சிமிகு கண்டன ஊர்வலம்

சென்னை மே 17—தமிழ் ஆட்சிமொழி சட்டத்தை அமுல படுத்தக் கோரி இன்று முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் கோட்டையை நோக்கி மறியலுக்குச் சென்ற தமிழ் அறிஞர்கள் நூற்றுக்கணக்கில் கைதானார்கள்.

தமிழ் ஆட்சிமொழி சட்டத்தை அமுல்படுத்தக்கோரி தலைநகர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இன்று தலைமைச் செயலகத்தின் முன் மறியல் நடத்த தமிழ் அறிஞர் களும் தமிழ் ஆர்வலர்களும் ஊர் வலமாகப் புறப்பட்டனர். காலை 10-30 மணியளவில் பெரியார் பாலம் அருகே உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து ஊர் வலம் புறப்பட்டது ஊர்வலத் துக்கு 'முத்தமிழ்க் காவலர்' கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமை தாங்கினார்.

தமிழுக்கு ஆதரவான முழக் கங்களை எழுப்பிக்கொண்டு கண் டன ஊர்வலம் வாலாஜா சாலை வழியாக வந்தபோது, அரசு விருந்தினர் மாளிகை அருகே காவல் துறையினர் தடுத்து நிறுத் தினர். அதற்கு மேல் தடை விதிக்கப்பட்ட பகுதி என்று கூறினர். தடையை மீறுவதாக, தமிழறிஞர்கள் அறிவித்தனர்; உடனே, காவல் துறையினர், அனைவரையும் கைது செய்தனர்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ விஸ்வநாதம், உவமைக் கவிஞர் சுரதா, பேராசிரியர் சாலை இளந்திரயன், சாலினி இளந்திரையன், 'பெருங்கவிக்கோ' வா. மு. சேதுராமன், புலவர் வே. புகழேந்தி, பேராசிரியர் சுப. வீரபாண்டியன், பேராசிரியர் இரா சேது, மறைதிரு மா. அப்புசாமி, குமர நடவரச ஈவப்பனார், கவிஞர் முத்துலிங்கம், பேராசிரியர் கல்யாணி, கவிஞர் கடலூர் மணி மாறன், முனைவர் மலையமான், புலவர் ப. சாத்தன், புலவர் வெற்றி யழகன், புதவர் த. சுந்தர்ராசன், உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர் கள் கைதானவர்கள்.

மடல்கள்

இந்த இதழில் 'தென்னகம் பொன்னகம்' கட்டுரை வெளியிட்டு கழகம் இந்தி எதிர்ப்புப்போர் தொடங்கியிருக்கும் இத்தருணத்தில்—நல்ல வலுவேற்றியுள்ளீர்கள்.

'அண்ணாவை மறந்து விட்டார்களா?—கல்கியின் பயனுள்ள அலசல் தங்களின் ஈழ வானொலி பேட்டி, புலிகளின் கோரிக்கை—'அண்ணாவின் தன்வரலாறு'—ஒரு வாழ்வியல் உரையாடல்—அம்பேத்கார் சிந்தனைகள்—இப்படி பக்கத்திற்கு பக்கம் பயனுள்ள வகையில் கருத்துத் தொகுப்பு கற்கண்டின் இனிப்பு

பட்டி. க. செங்குட்டுவன்—விருதாசலம்

7—4—93 காஞ்சி நாடு இதழ் கண்டேன் மகிழ்ச்சியுற்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1955, 56, 57 முதலிய ஆண்டுகளில் இந்தி ஆதிக்கம் குறித்து தமிழ் மக்களின் தன்னுரிமை குறித்தும் சமுதாயத்தின் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் தந்துள்ள ஆழ்ந்த கருக்துக் கருவூலங்கள் இன்றைக்கும் பொருத்தமாக இருக்கின்ற படியால் அத்தகைய கருத்துககளைதொடர்ந்து வெளியிட்டு இன்றைய தலைமுறையினரை சிந்திக்கத் தூண்டுங்கள்

மு. வயலூர் குமரன்
தலைவர் பேரறிஞர் அண்ணா இலக்கியப்
பேரவை. திருநெல்வேலி மாவட்டம்

அன்பிர்க்குரியீர். வணக்கம், காஞ்சி நாடு எம்லா நிலைகளிலும் பல்வேறு செய்திகளைக் கொண்டு மிகச் சிறப்பாக வெளிவருவது கண்டு உவகையுடன் பாராட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் வரலாறு படிக்க படிக்க பழைய எண்ண அலைகளை மீட்டுகின்றன அண்ணாவின் மொழியிலே திளைத்தது போன்று ஒருணர்வு, காஞ்சி நாடு ஏடு வாயிலாக அண்ணாவை திங்கள் தோறும் பார்க்கும் வாய்ப்பும் பெற்று வருகின்றேன்.

தமிழகமே அறிஞர் அண்ணாவின் புகழ்பாடி—அதன் விளைவாக 'காஞ்சி நாடு' வளர்கிறது—ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி வளர்க! வாழ்க!

புலவர். பி.சி. கணேசன்—சென்னை

பேரறிஞர் அண்ணாவின் தம்பியான நான்! உண்மையாகச் சொல்கிறேன். 'காஞ்சி நாடு' ஒரு தலை சிறந்த. 'கலை இலக்கிய,' 'அரசியல்' படைப்பிலக்கியத் திங்கள் இதழே! இது வீரார்ந்த தமிழர் தம் வரலாற்றில் நிச்சயம் இடம் பெறும்.

இனமானக் கவிஞர். இடிமுரசார்—சென்னை

என்றும் வரட்டும்

வாடிகிடந்த மனத்திற்கு தெம்பளிக்க 'காஞ்சி நாடு' வந்தது;

களிப்பைந்தந்தது! 'பைந்தமிழ் வித்தகர்' பேரறிஞர் அண்ணா வளர்த்த தமிழ்ப் பயிர் செழிக்க அயராதுழைக்கும் 'காஞ்சி நாட்டை' பயன்படுத்திக் கொண்டு தமிழர் நெஞ்சம் களிக்கட்டும்! பெரியாரின் பகுத்தறிவுப் பாதையில் 'இலக்கியப் பூங்காவாகி மணம் பரப்பும் காஞ்சி நாடு' என்றும் வரட்டும்! வளரட்டும்.

பாவல்மதி தமிழறிவன் —சென்னை

காஞ்சி நாடு சின்ன நிலையில் சிறப்பாக இருக்கிறது. தங்கள் முயற்சிக்கும். உழைப்புக்கும் பாராட்டுகள்.

திரு. மலேய சக்திமோகன்—சென்னை

7—5—93 'காஞ்சி நாடு' இதழில் விடுதலைப் போர் குறித்து அண்ணா முழங்கிய முழக்கத்தின் ஒரு பகுதியை வெளியிட்டிருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன்.

திரு. மு வயலூர் குமரன்—திருநெல்வேலி
திருநெல்வேலி மாவட்ட பேரவை செயலர்

முத்துப்பேட்டை தர்மலிங்கம் மறைவு

முத்துப்பேட்டை தோழர் தர்மலிங்கம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி நமக்கு மிகவும் துன்பமும் துயரமும் தரும் செய்தியாகும். முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் தி மு.க.வின் சீரிய செயல்வீரர். தேர்ந்த பகுத்தறிவாளர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா. கலைஞர் ஆகியோரிடமும். திராவிடர் கழகத்திடமும் அவர் கொண்ட பற்று, கொள்கை அடிப்படையிலான பற்று ஆகும். அவரது மறைவினால் வாடும் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—ஆர்.

அண்ணாவின் தொலை நோக்கு

—மு. வயலூர்க் குமரன்
[பேரவை தலைவர்-திருநெல்வேலி மாவட்டம்.]

''காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை இந்தியா ஒன்று.''

''நன்று.''

''நாமெல்லாம் பாரத மாதாவின் புதல்வர்கள்.''

''மிகவும் நன்று.''

"இன, மொழி வேறுபாடுகளைக் கூறிப் பிரிவினை வாதத்தைக் கிளப்புவது தேசத் துரோகம்.''

''நீங்கள் சொன்னால் சரிதான்.''

''அரசியல் சட்டப்படி இந்திதான் இந்த நாட்டின் ஆட்சி மொழி அதனை எல்லோரும் ஏற்றுக்கொண்டு இந்த நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்த வேண்டும்.''

''இங்கே தான் உதைக்கிறது. நண்பரே! இந்தி தான் ஆட்சி மொழியென்றால் எங்கள் செந்தமிழின் நிலையென்ன? இந்தி மொழி எங்கள்மீது ஆதிக்கம் செலுத்த எங்களை இரண்டாந்தரக் குடி மக்களாக்குவதை நாங்கள் ஏற்க மாட்டோம். எங்கள் மொழியினைக் காத்திட 1965-ம் ஆண்டில் எங்கள் தமிழ் மக்கள் பெரும் புரட்சி செய்ததை மறந்து விடாதீர்.''

''இதற்குத்தான் நான் முதலிலேயே சொன்னேன். இந்தியா ஒரே நாடு. நாமெல்லாம் ஒரு தாயின் மக்கள். இங்கே மொழியின் பெயரால் பிரச்சினைகள் எல்லாம் உண்டாக்கக்கூடாது.''

''மொழியின் பெயரால் பிரச்சினை உருவாக்குவது நீங்களா, நாங்களா?''

''ஐயோ, நாமெல்லாம் இந்தியர்களல்லவா? இந்தி இந்தியாவின் மொழி தானே! ஆங்கிலம் போல் அந்நிய மொழியல்லவே!''

''ஆங்கிலம் உமக்கு அந்நிய மொழியென்றால், எங்களுக்கு இந்தியும் அந்நிய மொழிதான்!''

''நீ தேசியத்தையே மதிக்க மறுக்கிறாய்.''

''எது தேசியம்? ஒரு மொழியின்மீது மற்றொரு மொழி ஆதிக்கம் செய்து அழிப்பதா தேசியம்? நாடு என்றால் என்ன? தேசியம் என்பதன் உண்மையான பொருள் என்ன?''

ஒரு தேசியவாதியும் செந்தமிழனும் சந்திக்கும்போது இப்படியெல்லாம் வாதிடக்கூடும்.

நாடு, தேசியம் என்ற சொற்கள் உலகில் எவ்வாறு பொருள் கொள்ளப்படுகின்றன? இதோ கேளுங்கள் :

> ''நமக்கென்று ஓர் அரசியலமைப்பு உள்ளது என்பது உண்மைதான். அருந்திறல் வாய்ந்த பெரியவர்கள் தாம் அதனை யாத்தார்கள். ஆனால் 'நாடு' என்பது பற்றி நாம் மீண்டும் சிந்தனை செய்யவும், மறு மதிப்பீடு செய்யவும், மறு ஆய்வு செய்யவும், மறு மதிப்பீடு செய்யவும் புதிய விளக்கம் பெறவுமான காலக்கட்டம் வந்துள்ளது. நான், இந்தியாவின் ஒரு பகுதியாக இப்போது இருக்கின்ற—ஆனால் வேறுபட்ட இனத்தவருக்கு உரிமையானது என்று நான் கருதுகிற ஒரு நாட்டினைச் சேர்ந்தவன் என்பதை இங்கே கூறிக் கொள்கிறேன். அந்த நாடு யாருக்கும் பகையானதல்ல......நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். நான் திராவிடன் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன்.''

இவ்வாறு 1962-ம் ஆண்டு மேதிங்கள் முதல் நாளில் டெல்லி நாடாளு மன்ற மேலவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முழக்கமிட்டார்கள். அந்த முழக்கம் வடநாட்டு ஆதிக்கவாதிகளுக்கும் பொதுவாகத் தேசியவாதிகளென்று சொல்லிக் கொள்வோர் அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. இந்தியாவிலிருந்து 'திராவிட நாடு' பிரிந்து தனி நாடாகத் திகழக்கூடிய நாள் நெருங்கி விட்டதாக அவர்கள் அஞ்சினார்கள்.

திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கை தவறானதென்று கருதினால், அதனை நாட்டுக்கும் மக்களுக்கும் விளக்கிக் கூறித் திராவிட நாடு பிரிவினையை ஆதரிக்கும் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படுத்திட முடியும் என்ற தன்னம்பிக்கை தேசியவாதிகளிடம் இல்லை. எனவே, அவசர அவசரமாகப் பிரிவினைத் தடைச் சட்ட வரைவினை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். இந்தச் சட்ட வரைவினை எதிர்த்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் ஆற்றிய பேருரை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகத் திகழ்கிறது. அந்தச் சொற்பொழிவிலிருந்து சில துளிகள் மட்டும் கீழே தரப்படுகின்றன.

''நாங்கள் தவறு செய்வதாக நீங்கள் கருதினால் எங்களைத் திருத்துங்கள். உங்களிடம் செறிவு மிக்க சான்றுகள் இருந்தால் அவற்றை கூறி எங்களைத் தெளிவு படுத்துங்கள். உங்கள் உங்கள் கருத்தினை ஏற்குமாறு எங்களை நீங்கள் மாற்றுங்கள். அவற்றையெல்லாம் விட்டு விட்டு நீங்கள் எங்களை அடக்கி வைக்கிறீர்கள். சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தி ஒரு கருத்தை நிலை நாட்டுவதென்பது மோசமான வாதமுறையாகும். மக்களிடையே இரண்டு விதமான கருத்தினைச் சட்டப்படி நீங்கள் திணிக்க முயன்றால், நீங்கள் நியாயமான போட்டியிலிருந்து நழுவி தருகிறீர்களென்று பொருள்...... இந்தச் சட்டம் நிறைவேறினால் நாங்களெல்லாம் தலைமறைவாகி விடுவோம் என்பதாக என் நண்பர் புபேஷ்குப்தா கூறினார். நாங்கள் எப்போதும் வெளிப்படையாகவே வாழ்ந்து வருகிறோம், தலைமறைவாகிவிட வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. ஆனால் (எங்கள் மக்களுடைய) புகையும் உள்ளக் குமுறல் தலைமறைவாகும். அவ்வாறு தலைமறைவாக இருக்கக்கூடிய உள்ளக் குமுறலை எந்தச் சட்டத்தைக் கொண்டும் கட்டுப்படுத்திட இயலாது. இலட்சக்கணக்கான மக்களின் உள்ளத்தில் ஒளிந்து கிடக்கின்ற குமுறலை அடக்குவதற்கு அரசியல் தத்துவம் எந்தவித நடவடிக்கையையும் இதுவரை உருவாக்கிடவில்லை.''

மேற்கண்டவாறு பேரறிஞர் அண்ணா டெல்லி ஆதிக்கவாதிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். ''கருத்தோடு கருத்தை மோதவிடுங்கள். எந்தக் கருத்தை ஏற்பது என்ற முடிவை மக்களிடம் விட்டு விடுங்கள்'' என்று வாதாடினார். அந்த வாதங்கள் டெல்லியின் செவிகளில் ஏறவில்லை. பிரிவினைத் தடைச்சட்டம் நிறைவேறியது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வன்முறையைச் சற்றும் விரும்பாதவர். அவரைப் பின்பற்றிய இலட்சக்கணக்கான மக்கள் அரசின் அடக்கு முறைகளையும் மாற்றாரின் வன்முறைகளையும் தாங்கிப் பழக்கப்பட்டவர்களே தவிர, அரசுக்கோ அல்லது மாற்றாருக்கோ எதிராக வன்முறையில் ஈடுபடுவதை விரும்பாதவர்கள். அவர்களை அண்ணா அந்த அளவுக்குப் பக்குவப்படுத்தி வைத்திருந்தார். ஓட்டு முறையிலேயே நாட்டு விடுதலையைப் பெற்றுவிட முடியுமென்று அவர் உளமார நம்பினார். ஆனால் ஆதிக்க புரியினர் ஓட்டு முறையில் அண்ணாவின் பிரிவினைக் கோரிக்கையைச் சந்திக்க முன்வரவில்லை மாறாகச் சட்டத்தின் துணையைக் கொண்டு அடக்கி ஒடுக்கிடவே முனைந்தனர்.

217210

இந்த நிலையில், பேறிஞர் அண்ணா அவர்கள் தமது திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட வேண்டியதாயிற்று.

சட்டத்தின் மூலமும் அடக்கு முறைகளின் மூலமும் எழுபத்தைந் தாண்டுக் காலமாக அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த தேசிய இன உணர்வுகள், சோவியத் ரஷ்யாவில் திடீரென வெடித்துக் கிளம்பிய வரலாற்று நிகழ்ச்சியினை ஆதிக்கவாதிகள் மறந்திடலாகாது

சோவியத் நாடு சிதறுண்டு போனது பற்றி ''இந்து'' நாளேட்டில் நிதிஷ் சக்கரவர்த்தி என்பார் எழுதியுள்ள ஓர் ஆய்வு கட்டுரையில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

> ''சோவியத் கட்டுரையிலிருந்து குடியரசுகள் ஒவ்வொன்றாக விலகிச் சென்றமைக்கு முதன்மையான காரணம் ரஷ்யக் கலாச்சாரத்தையும் ரஷ்ய மொழியையும், ரஷ்யர்களல்லாத பிற குடியரசுகளைச் சேர்ந்த பல்வேறுபட்ட இனமக்கள் மீது திணிப்பதற்கும், அந்த மக்களுக்கேயுரிய தனியான கலாச்சாரங்களை மறைப்பதற்கும் அழிப்பதற்கும் நடைபெற்ற முயற்சிகளேயாகும்.''

என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறுகையில்

> ''இந்தியாவின் இனப் பிரச்சினைகளுக்கான காரணம், டெல்லியிலுள்ள அதிகாரக் குவியலும், தங்கள் மொழி மீதும் கலாச்சாரத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது என்று பல்வேறு இன மக்களிடையே தோன்றியுள்ள அச்சமும் தான் என்று தெளிவாகக் கூறிடமுடியும். இந்திய அரசியலமைப்பை மாற்றியமைத்திட வேண்டுமென்ற குரல் வலுவாகக் கேட்கத் தொடங்கியுள்ளது. டெல்லி ஆட்சியாளர்கள் இந்திய அரசியலமைப்பினைப் பெருமளவில் மறுஆய்வு செய்து, பெரிய அளவில் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இதில் தவறினால், மக்களின் மனக்குமுறல் மிகப் பெரிய அளவில் வெடித்துச் சிதறுமென்பது உறுதி.''

என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் இன்று சொல்வதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றே கூறினார்கள். ஆட்சியாளர்கள் அண்ணா கூறியதைக் கேட்டுத் தக்க நடவடிக்கைகளை அன்றே எடுத்திருந்தால் இந்தியாவில் இன்று நிலவும் பல அவலங்களுக்கு இடமே இல்லாது போயிருக்கும் அண்ணாவின் தொலைநோக்கு ஆட்சியாளர்களால் இன்னும் உணரப்படவில்லை. அது உணரப்படாத வரையில்,

நன்கொடை ரூ. 2-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி
நாடு

இந்தியத் துணைக் கண்டத்தில் பிரச்சினைகள் மேலும் உருவாகுமே தவிரக் குறைந்திட வாய்ப்பில்லை

இதே பொருளில் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் கட்டுரை எழுதியுள்ள இக்பால் மசூது என்பார் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

> ''ரஷ்யா, யூகோஸ்லாவியா நிகழ்ச்சிகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் உள்ளன. அந்த நாடுகளைப் போலவே நாமும் ஒரு தற்காலிக (Provisional) நாடுதான். கடந்த நாற்பதாண்டுகளில் நாம் அமெரிக்காவைப் போலவோ அல்லது பிரான்ஸ், பிரிட்டனைப் போலவோ ஒரு தேசிய ஒற்றுமையுள்ள மக்களை உருவாக்கிட வில்லை. அவ்வாறு உருவாக்கிட இனிமேல் நாம் முயற்சி தேவையா? அவ்வாறு செய்ய நாம் இப்போது முயன்றால் அதன் விளைவு ஒற்றுமையாக இருக்காது. மாறாகச் சிதறலாகத்தான் இருக்கும். காஷ்மீர், பஞ்சாப், தமிழ் நாடு, இலங்கை ஆகிய இடங்களில் நடைபெறும் உணர்வு நிரம்பிய, வரலாற்று அடிப்படையிலான இயக்கங்கள் பற்றி நாம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இவ்வாறே நாம் தொடர்ந்து இருப்போமானால், சோவியத், யூகோஸ்லாவியா நாடுகளுக்கு ஏற்பட்ட கதிதான் நமக்கும் ஏற்படும்.''

என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்பால் மசூது இன்று தான் இதனைக் கூறுகிறார். ஆனால் நமது பேரறிஞர் அண்ணாவோ ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே இதனைக் கூறினார். அண்ணாவின் அறிவாற்றலும் தொலை நோக்கும் இதிலிருந்து தெரிய வருகின்றன அல்லவா?

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர், வெளியிடுபவர்: மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34
அச்சிடுபவர்: C. R. கண்ணன், அண்ணன் அச்சகம், சென்னை-24.

பெறுநர்:
Director
Tamil Nadu Archives
MADRAS - 8

அனுப்புநர்:
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7, அவின்யு சாலை,
சென்னை-600 034.